தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.55/மா/2022**

**நாள். 13.06.2022**

திரு. R. மயில்சாமி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம்–02, மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5-ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 19.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.05.2022 அன்று பெறப்பட்டு 55/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5-ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 19.05.2022 நாளிட்ட தனது மனுவில், " நான் கடந்த 16.10.2020 தேதியில் மதுரை மாநகராட்சி 23வது வார்டு, தற்போது புதிய வார்டு எண்.1, மதுரை வடக்கு வட்டம், விளாங்குடி, 1பிட் மற்றும் II பிட் உள்ள கண்மாய் ஆக்கிரமிப்பு சர்வே எண்.2/1 மற்றும் மாநகராட்சிக்கு உட்பட்ட வாய்க்கால் ஆக்கிரமிப்பு சர்வே எண்.114,113,111,78,49,27 மற்றும் இதர சர்வே எண் மற்றும் கணபதி நகர், செம்பருத்தி நகர், சக்தி நகர், செம்பருத்தி நகரில் உள்ள அய்யப்பன் தெருவில் உள்ள பாதை ஆக்கிரமிப்புகளையும் முழுமையாக அகற்றி அத்துமால் காண்பித்து கல் ஊன்ற வேண்டும் என்று மதுரை வடக்கு வட்டாட்சியர் அவர்களுக்கு மனுவினை பதிவுத் தபாலில் அனுப்பி இருந்தேன். ஆனால் வட்டாட்சியர் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்பு 20.02.2021 தேதியில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற புகார் மனு

அளித்து இருந்தேன். மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் மதுரை வடக்கு வட்டாட்சியர் அவர்கள் கடிதம் ஓ.மு.எண்.3416/2021/ஆ5 நாள் 29.11.2021ல் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதி என்றும் ஆதலால் மதுரை மாநகராட்சிதான் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்றும் உதவி ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை மேற்கு மண்டலம், தற்போது மண்டலம்–1 அவர்களுக்கு ஆக்கிரமிப்புகளை அகற்ற வட்டாட்சியர் வடக்கு மதுரை அவர்கள் 29.11.2021 கடிதம் அனுப்பி இருந்தும் இதுநாள் வரையிலும் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற முன்வரவில்லை. ஆக்கிரமிப்புகள் அகற்றுவது குறித்து உதவி ஆணையர், மாநகராட்சி அவர்கள் எனக்கு இதுநாள் வரையிலும் ஒரு கடிதம் கூட எழுதி தெரிவிக்கவில்லை. எனவே உதவி ஆணையர் அவர்கள் தன் கடமையை சரிவர செய்ய தவறிவிட்டார். ஆதலால் உதவி ஆணையர் அவர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடடிவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தும், மேற்கூரிய ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற உத்ததவிடுமாறு மாண்புமிகு நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரையும் 02.06.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 26.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

3) மனுதாரர் 02.06.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" மதுரை மாநகராட்சி 23வது வார்டு, தற்போது புதிய வார்டு எண்.1, மண்டலம் 2 வடக்கு மண்டலம் விளாங்குடியில் கணபதி நகர், சக்தி நகர், செம்பருத்தி நகர் போன்ற இடங்களில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு சொந்தமான வீடுகளுக்கு முன்பும் மற்றும் பின்புறம் உள்ள கால்வாய் இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள தங்களது வீடுகளுக்கு முன்பு உள்ள பொதுப்பாதையில் செப்டிக் டாங்க், Ramp மற்றும் படிக்கட்டுக்களை அமைத்து பயன்படுத்தி வருகின்றனர். அதே போன்று ஒரு சில இடங்களில். அவர்களது வீடுகளுக்கு பின்பக்கமுள்ள வாய்க்காலின் ஒரு சில பகுதிகளை ஆக்கிரமித்து தங்களது வீடுகளுடன் இணைத்துக்கொண்டனர்.

மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் குறித்து வருவாய் துறைக்கு புகார் அனுப்பியபோது, அத்துறை அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பினை தொடர்பு கொள்ளுமாறு கூறி விட்டனர். மதுரை மாநகராட்சியை அணுகி புகார் மனுக்களை அளித்தபோது, அம்மனுக்களின் மீது எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. எனவே, விளாங்குடி 1பிட் மற்றும் II பிட்டில் உள்ள கண்மாய் ஆக்கிரமிப்பு மற்றும் 30 அடி அகல ஊத்துகால்வாய்கால் சர்வே எண்.2/1, 4,9, 27, 78,111,113,114, 137/3, 146/2 மற்றும் கணபதி நகர், செம்பருத்தி நகர், சக்தி நகர் , செம்பருத்தி நகர் அய்யப்பன் தெரு ஆகிய இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என்றும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்றும், மேலும் எனது 19.05.2022 நாளிட்ட மனுவினையே எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4) 02.06.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு தன்னால் கலந்து கொள்ள இயலவில்லை என்ற நிலையை தெரிவித்து, மதுரை மாநகராட்சி வடக்கு மண்டல உதவி பொறியாளர் அவர்கள் பிறிதொரு நாளில் விசாரணைக்கு கால அவகாசம் கோரியுள்ளதை அடுத்து, அவருக்கு ஒரு

வாய்ப்பு அளிக்கும் முகத்தான் **06.06.2022** அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டது.

5) மதுரை மாநகராட்சி வடக்கு மண்டல உதவிப்பொறியாளர் **06.06.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி புதிய வார்டு எண்.1 மண்டலம் 2 வடக்கு மண்டலம், விளாங்குடியில் கணபதி நகர், சக்தி நகர், செம்பருத்தி நகர் ஐயப்பன் தெருவில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பு பொதுப்பாதையை ஆக்கிரமித்து படிக்கட்டுக்கள், செப்டிக் டேங்க், மற்றும் Ramp அமைத்து தெருவினை ஆக்கிரமித்துள்ளனர். மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை காவல்துறை உதவியுடன் இன்னும் பத்து நாட்களில் அகற்றப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று மேற்கண்ட வீடுகளுக்கு பின்பக்கம் உள்ள வாய்க்கால் இடத்தையும் அவ்வீட்டு உரிமையாளர்கள் தங்களது வீடுகளுடன் சேர்த்து ஆக்கிரமித்துள்ளனர். மேற்கண்ட வாய்க்கால் இடம் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளது. எனவே, அத்தகைய ஆக்கிரமிப்பையும் பொதுப்பணித்துறைக்கு தெரியப்படுத்தி, பொதுப்பணித்துறையுடன் மாநகராட்சியும் இணைந்து கால்வாய் ஆக்கிரமிப்பை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்கு மூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த புகைப்படங்கள், மதுரை மாநகராட்சி, மண்டலம் 02–ஐச் சேர்ந்த உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் விளாங்குடி பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பு உள்ள பொதுப்பாதை மற்றும் பின்புறம் உள்ள கால்வாய் இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி 23வது வார்டு, தற்போது புதிய வார்டு எண் 1, மண்டலம் 2 வடக்கு விளாங்குடியில் கணபதி நகர், சக்தி நகர், செம்பருத்தி நகர் போன்ற இடங்களில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு சொந்தமான வீடுகளுக்கு முன்பும் மற்றும் பின்புறத்தில் உள்ள கால்வாய் இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள தங்களது வீடுகளுக்கு முன்பு உள்ள பொதுப்பாதையில் செப்டிக் டாங்க், Ramp மற்றும் படிக்கட்டுக்களை அமைத்து பயன்படுத்தி வருகின்றனர். அதே போன்று ஒரு சில இடங்களில், அவர்களது வீடுகளுக்கு பின் பக்கமுள்ள வாய்க்காலின் ஒரு சில பகுதிகளை ஆக்கிரமித்து தங்களது வீடுகளுடன் இணைத்துக் கொண்டுள்ளதையும் ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

தெருப்பகுதி ஆக்கிரமிப்பு ஏற்கனவே உதவிப்பொறியாளரால் உறுதி செய்தவண்ணம் 10 நாட்களில் அகற்றப்பட வேண்டும். இந்தக்காலக்கெடுவுக்குள் அகற்றாவிடில் சம்பந்தப்பட்ட கள அலுவலர்கள் மீதும் உதவி ஆணையர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இதை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் உறுதி செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது.

விளாங்குடி I பிட் மற்றும் II பிட்டில் உள்ள கண்மாய் ஆக்கிரமிப்பு மற்றும் கணபதி நகர், செம்பருத்தி நகர், சக்தி நகர், செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு ஆகிய இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட " Madurai City Municipality Corporation Act 1971" பிரிவு 258–ல் Removal of encroachments. – (i)ன்படி பொதுப்பணித்துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து மேற்சொன்ன ஆக்கிரமிப்புகளை (2) இரண்டு மாதங்களில் அகற்றிட துரித நடவடிக்கை

எடுத்திட மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.R. மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
மனை எண். 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புது விளாங்குடி,
மதுரை – 18.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4) உதவி ஆணையர்,
மண்டலம்–2, (வடக்கு)
மதுரை மாநகராட்சி,
மதுரை.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்